மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

மலர்: 02 | குரல்: 120 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 01.01.2 ...ங்கள் 14

## தமிழீழ தேசியப் பிரச்சனை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்!



பக்கம் 3

## அடிப்படை நிலைப்பாடுகளில் சமரசம் செய்ய முடியாது!

### புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் ருத்திரகுமார்



## புதிய ஆண்டில் புதிய அரசியலமைப்பு ஊடாகத் தீர்வு வேண்டும்!

## இல்லையேல், தீர்க்கமான முடிவை தமிழர்கள் நாம் எடுப்போம்!!

பக்கம் 5

### இரா.சம்பந்தன் எம்.பி நம்பிக்கை!

## தாய்நாட்டை பலப்படுத்த அனைவரினதும் பொறுப்புணர்வும், அர்ப்பணிப்பும் தேவை!



பக்கம் 12

### புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு!!



## மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர் நாட்டுக்குத் தேவை!

பக்கம் 12

### புத்தாண்டுச் செய்தியில் சஜித் பிரேமதாச தெரிவிப்பு!!

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## புதிய வருடத்தை வரவேற்பதா?

உலகில் யுத்தம் நிரந்தரமானதாக இருக்கிறது. உரிமைகளுக்கான போர்களாகவும், அதிகாரத்துக்கானதாகவும், எல்லைகளை வரையறுப்பதற்கும், எல்லைப் பாதுகாப்புகளுக்காகவும் என்று பல வடிவங்களில் அது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

ரஷ்ய – உக்ரேன் போர் முடிவுக்கு வரவில்லை. அதற்கிடையில் ஹமாஸ் - இஸ்ரேல் யுத்தம் மூண்டுவிட்டது. உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபை, பாப்பரசர் என பலரும் கோரிக்கைகளை விடுத்த வண்ணமிருந்தாலும் அவற்றினை முடிவுக்குக் கொண்டு வரமுடியாதிருக்கிறது. குழந்தைகளும், சிறுவர்களும், பெண்களும் அதிகம் கொல்லப்படுகின்றனர்.பாதிக்கப்படுகின்றனர்.

30 வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் நடைபெற்ற யுத்தம் 2009 மே உடன் முடிவுக்கு வந்தது. காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகள் இப்போதும் வவுனியாவில் போராடிவருகின்றனர். இன்னமும் அவர்களுடைய போராட்டத்துக்கு முடிவு கிடைக்கவில்லை. அவர்களுடைய எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேறவில்லை. மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல் தரைப்பிரச்சினையை தீர்க்கக்கோரி பண்ணையாளர்கள் போராடிவருகின்றனர். விடுதலைப்புலிகளுடனான யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்து விட்டது. இருந்தாலும் இன்னமும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அந்தவகையில், தமிழ் மக்களின் அரசியலுரிமைக்கான போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது. நாட்டில் பொருளாதார நெருக்கடி தலைவரித்தாடுகிறது. இவ்வாறு பல நெருக்கடிகளுக்குள்தான் கடந்தவருடம் போய் புதியவருடம் தொடங்குகிறது.

இன்றுமுதல் வற் வரி அதிகரிக்கப்படுகிறது. வருமான வரி இலக்கங்களை அனைவரும் பெற்றாகவேண்டும். மேலும் அதிகரிக்கும் விலைவாசியுடன் போட்டிபோட்டுக் கொண்டு வாழ்க்கையை நடத்தத் தயாராவோம்.

2019க்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகள் விசுவரூபம் எடுத்து 2012ல் கொடூரமான நெருக்கடிநிலை உருவானது. அது 2023ல் முடிவுக்கு வந்துவிடலாம் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்தாலும் இன்னமும் அது சீராகாது தொடர்ந்த வண்ணமிருக்கிறது.

ஆனாலும் எல்லாவற்றையும் அனுசரிக்கும், சமாளிக்கும், பழக்கப்படுத்திக் கொள்பவர்களாக மக்கள் இருக்கின்றனர் என்ற வாக்கியத்துக்கேற்ப நாட்டு மக்களின் நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

எரிபொருளுக்காக வரிசையில் நிற்க வேண்டிய, மின்சாரத் துண்டிப்புகள் ஏற்பட்ட நிலை உருவானபோது எல்லோரும் அதற்குள் தம்மைப் பழக்கப் படுத்திக் கொள்ள முனைந்து கொண்டிருந்தனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப் பேற்றவுடன் விலைகள் அதிகரிக்கப்பட்டு, கியூ.ஆர் நடைமுறைகளுடன் எரிபொருட்கள் விநியோகிக்கப்பட்டன. அவ்வேளைகளில் விலை அதிகரிப்புகள் பற்றிப்பேச்சுக்கள் இருந்தாலும், பின்னர் அது பழக்கத்துக்கு வந்து விட்டது.

இவ்வாறானதொரு பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டிய ஆண்டாக இந்தப் புதிய ஆண்டையும் எதிர் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் அவ்வாறான முடிவுகளை எடுக்க முடியாத சாதாரண மக்கள் நாட்டிலேயே வாழ்க்கையைக் கழித்தாகவேண்டும்.

இவ்வாறான கட்டாயத்துக்குள்ளிருப்பவர்களுடைய வாழ்க்கை மிகவும் மோசமாக மாறிவருகின்றன நிலையில் நெருக்கடியேதான் வாழ்க்கை என்றான ஆண்டாக 2024ஐ கடப்பதற்கான உறுதிமொழியை எடுத்துக் கொள்வதனைத் தவிர வேறுவழியில்லை.

காணாமல் போனவர்களுக்கு நீதிகிடைக்குமென்று நம்பிக்கை கொள்வோம். குால்நடைப் பண்ணையாளர்களின் மேற்ச்சல் தரைப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவேண்டும். போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். சர்வதேச நீதி கிடைக்கவேண்டும்.

அத்துடன், வழமைபோல் தமிழ் மக்களாகிய நாம் சுதந்திரமடைந்ததுமுதல் தொடங்கிய அரசியலுரிமைக்கான போராட்டத்திற்கான நிரந்தரமான தீர்வு கிடைக்குமென்று நம்பிக்கொள்வோம்.

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.**

SCAN ME

# தமிழீழ தேசியப் பிரச்சனை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்! அடிப்படை நிலைப்பாடுகளில் சமரசம் செய்ய முடியாது!



**“2024 ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு செய்தியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன் தமிழீழ தேசிய பிரச்சனை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்** என்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும் அக்கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு புலம்பெயர் அமைப்புக்களால் ஒருங்கிணைந்து 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி உருவாக்கிய பொது நிலைப்பாடுகள் எந்த ஒரு அரசியல் தீர்வுகளும் முக்கிய வகிபாகமாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்

மேலும் 2024 ஆம் ஆண்டு உலகின் பல முக்கிய இடங்களில் தேர்தல்கள் நடைபெற உள்ளதை குறிப்பிட்ட ருத்ரகுமாரன் இந்திய தேர்தல் தொடர்பாக, அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கச் செய்து அவற்றை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புக்கள் குறித்து தமிழ் மக்கள் கவனம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி தேர்தல், தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையில் இருந்து தேர்தலை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து சிந்திக்க வேண்டும் என கூறியுள்ளார். இவ்வருடம் நடைபெற இருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நான்காவது அரசவைக்கான தேர்தலில் புலம்பெயர் ஈழத் தமிழர் தேசம் பல்லாயிரக்கணக்கில் பங்களித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயக விழுமியத்தை பலப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.

தற்போது பாலஸ்தீனத்தில் நடைபெறும் அனர்த்தங்கள் ஐக்கியநாடுகள் சபை உட்பட்ட உலக அமைப்புகள் நீதியை நிலைநாட்ட திராணி அற்றவை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலகில், நீதியையும் சமாதானத்தையும் நிலை நாட்ட, புதிய பொறிமுறைகளையும், புதிய நியதிகளையும் உருவாக்குவதற்கான முயற்சியில், உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள், அனைத்துலக சிவில் சமூகம், அறிவு ஜீவிகள், சமூக வலைத்தளங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து ஈடுபடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.”

அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழ் மக்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எனது ஆங்கிலப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவிக்கும் இத் தருணத்தில், கடந்த ஆண்டு தொடர்பான சில கருத்துக்களையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்து போன ஆண்டில் தமிழ் மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நடைபெறவில்லை.

உலக அரங்கில், ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலின் கொடூரமான தாக்குதல்களால் சொல்லணாத் துயரங்களை அனுபவித்த ஆண்டாக கடந்த ஆண்டு அமைந்திருந்தது.

கடந்த ஆண்டில் பாலஸ்தீன மக்கள் அனுபவித்த துயரம் நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையில் அமைந்ததோடு, முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்காலத்தில் நமது மக்கள் சந்தித்த பெருந்துயரையும் எமக்கு நினைவு படுத்தியிருந்தது. மலர்ந்துள்ள புத்தண்டிலாவது இம் மக்களின் வாழ்வு பாதுகாப்பானதாக மாற வழிவகை பிறக்கும் என நம்புவோம்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக அமைப்புகள் எவையும் நீதியின் பக்கம் நின்று உலகப்பிரச்சினைகள் எதனையும் தீர்த்து வைக்கும் திராணியற்றவை என்பதனை தற்போது பாலஸ்தீனம்தில் நடைபெறும் நிகழ்வுகள் மீண்டுமொருமுறை வெளிப்படுத்தி நிற்கின்றன.

எமது சூழலை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டில் அனைத்துலக அரசுகள் சிலவற்றின் அரவணைப்புடன் ‘ஹிமாலயா பிரகடனம்’ என்ற பெயரில் நடைபெற்ற அரசியல் பித்தலாட்டம் ஒன்றையும் நாம் காண நேர்ந்தது.

இப் பிரகடனமும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற காட்சிகளும் எந்தவகையிலும் தமிழ் மக்களின் நன்மை கருதியதாக அமையவில்லை.

தமிழ் டயாஸ்பொறவின் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டையும், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை போராட்டத்துக்கு சார்பான நிலைப்பாட்டையும் நீர்த்துப் போகச் செய்ய விரும்பும் அனைத்துலக அரசுகள் சில தமக்குச் சேவகம் செய்யக்கூடியவர்களை தமிழர் தரப்பில் இருந்து இப் பிரகடனத்துக்காகத் தெரிவு செய்துள்ளது போலத் தெரிகிறது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் எவரும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அரசியல் விருப்புக்களைப் பிரதிபலிப்பவர்கள் அல்ல.

இதனால், இவர்களின் எந்தப் பிரகடனமும் தமிழ் மக்களுக்கு ஒரு பொருட்டு அல்ல. இதனைத் தாயகத்திலும் டயாஸ்பொறாவிலும் இருந்து வெளிவந்த கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. இதேவேளை, தென்னிலங்கையிலும். அனைத்துலக தூதுவராலயங்கள் மட்டத்திலும் இப் பிரகடனம் குறித்தும், அதனைத் தொடர்ந்த காட்சிகள் குறித்தும் ஒரு வகையான பரபரப்புக் காட்டப்பட்டதை உணர முடிந்தது.

அனைத்துலக தூதுவராலயங்கள் காட்டிய இப் பரபரப்பின் பின்னால் தமிழ் டயாஸ்பொறாவின் தமிழ்த் தேசிய அரசியலை மழுங்கடிக்கும் ஆர்வமும், ரணில் விக்கிரசிங்காவை சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதியாக்கும் விருப்பும் புதைந்திருக்கலாம். ஆனால், இந்த ‘ஹிமாலயப் பிரகடன’ நகர்வால் ஓரணு கூட அசையப் போவதில்லை என்பதே நடைமுறை உண்மையாக அமையும்.

பிறந்திருக்கும் புத்தாண்டில், உலகளாவியரீதியில் முக்கியமான சில நாடுகளில் தமது ஆட்சியாளர்களைத்

மிகுதி 04 ஆம் பக்கத்தில்...

# தமிழீழ தேசியப் பிரச்சனை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்!

## அடிப்படை நிலைப்பாடுகளில் சமரசம் செய்ய முடியாது!

தேர்வு செய்வதற்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் நடைபெறும் தேர்தல்கள் உலகளாவிய கவனத்தை ஈர்ப்பன.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியாவின் பாராளுமன்றத்துக்கு 2024 இல் நடைபெறும் தேர்தல்கள் கூடுதல் கவனத்துக்கு உரியவை.

தமிழ்நாட்டிலும், இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் ஈழத் தமிழ் மக்களின் போராட்டம் குறித்த கவனத்தை ஏற்படுத்துவதில் தமிழர் தரப்பு கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுக்கச் செய்து, அவற்றை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலும் இவ் வருடம் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையில் இருந்து தேர்தலை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து சிந்தித்தல் வேண்டும்.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாலாவது அரசவைக்கான தேர்தலும் நடைபெற உள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது தேர்தலில் எவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்களித்தார்களோ, அதே போன்று இம்முறையும் புலம்பெயர் ஈழத்தமிழர்தேசம் பங்களித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயக விழுமியங்களுக்கு வலுச்சேர்க்க வேண்டும் என இப்புத்தாண்டுச் செய்தியில் உங்களிடம் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, திம்புக்கோட்பாடுகளான, தமிழர் தேசம், தமிழர் தாயகம், தமிழர் தேசத்தின் சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஈழத்தமிழரின் அரசியல் தீர்வு குறித்து பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் ஒருங்கிணைந்து 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி உருவாக்கிய பொது நிலைப்பாட்டில் (Common Principles) உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்கள், அடிப்படை விடயங்களாக அமைய வேண்டும் என்பதனை இப்புத்தாண்டுச் செய்தியில் வலியுறுத்த விரும்புகிறேன்.

**1) இலங்கை தீவின் வடகிழக்கு பிராந்தியத்தில் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்) 1948 க்கு முன்பிருந்து வாழ்ந்த மக்கள் மற்றும் அவர்களின் சந்ததியினரின் பங்கேற்புடன் ஒரு ஜனநாயகவழி, மற்றும் அமைதியான நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்காகத் தமிழர்களின் பெருவிருப்புக்களைப் பூர்த்தி செய்யும், சர்வதேச அளவில் நடத்தப்பட்டதும் மற்றும் கண்காணிக்கப்பட்டதுமான, பொது சன வாக்கெடுப்பு ஒன்றை அனுமதித்தல்.**

**2) இலங்கைத் தீவின் வடகிழக்கு பகுதியில் இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை.**

**3) இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குதல்**

**4) இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையில் நிலவும் நிலைமையை பரிந்துரைத்தலுடன், இனப்படுகொலைக் குற்றத் தடுப்பு மற்றும் தண்டனை மற்றும் சித்திரவதைக்கு எதிரான தடுப்பு தொடர்பான மாநாட்டின் அடிப்படையின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கைக்கு எதிரான சட்ட நடவடிக்கை.**

**இந் நிலைப்பாடுகளைத் தமிழர் தரப்பு தனது அடிப்படை நிலைப்பாடுகளாகக் கொள்ளல் முக்கியமானது.** இந் நிலைப்பாடுளில் தமிழர் தேசம் சமரசம் செய்து கொள்ள முடியாது. இங்கு நடைமுறைச் சாத்தியம் என்று கூறி இந் நிலைப்பாடுகளை நீர்த்துப் போகச் செய்யும் எந்த முயற்சிகளும் எதிரிக்குச் சேவகம் செய்யக் கூடியவை என்பதனை நம்மவர் கவனத்தில் வைத்துக் கொள்ளல் அவசியம்.

உலகின் தற்போதைய அனைத்துலக கட்டமைப்புகள் நீதியின்பாற்பட்டு இயங்குபவையாய் இல்லை. இதனால், நீதியின்பால் நின்று செயற்படக்கூடிய புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இது நடைமுறைக்குக் கடினமான இலட்சிய நிலைப்பட்ட கோரிக்கையாக இருக்கலாம். இருப்பினும், புதிய மாற்றத்துக்கான அவசியம் காலத்தின் தேவையாக உள்ளது. உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள், அறிவுஜீவிகள். அனைத்துலக சிவில் சமூகம், சமூக வலைத்தளங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் புதிய மாற்றத்துக்கான முயற்சியில் ஈடுபடும்.

நிறைவாக, மலர்ந்திருக்கும் புத்தாண்டில் ஈழத் தமிழர் தேசம் தனது இலட்சியத்தில் முன்னோக்கிப் பயணிக்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போமாக!




# புதிய ஆண்டில் புதிய அரசியலமைப்பு ஊடாகத் தீர்வு வேண்டும்! இல்லையேல், தீர்க்கமான முடிவை தமிழர்கள் நாம் எடுப்போம்!! இரா.சம்பந்தன் எம்.பி நம்பிக்கை!

"பிறந்துள்ள 2024 ஆம் ஆண்டு தமிழர்களாகிய எமக்குத் தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடிய ஆண்டாக இருக்கும் என்று நம்புகின்றோம்." இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டானது இன, மத, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்குச் சமாதானம், மகிழ்ச்சி, சுபீட்சம் மிக்கதாக அமைய வேண்டும்.

இந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும்.

இந்தப் புதிய ஆண்டிலாவது புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும்.
ஆட்சியில் எந்த அரசு இருந்தாலும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் தமிழர்களாகிய நாம் தீர்க்கமான முடிவுகளை இந்த ஆண்டில் எடுப்போம்.
அனைவருக்கும் எனது இனிய புதுவருட வாழ்த்துக்கள்." - என்றார்.



# சிறிதரன் எம்.பியின் திக் விஜயம் ஆரம்பம்! தமிழர் தலைநகர் திருமலையில் சந்திப்புக்கள்!







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள், கடந்த ஆண்டு (31) திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி.நோயல் இம்மானுவேல் ஆண்டகை, தென்கயிலை ஆதீனத்தின் முதற் குருமகா சந்நிதானம் தவத்திரு.அகத்தியர் அடிகளார் ஆகியோரை நேரில்சந்தித்து ஆசிபெற்றதோடு, திருகோணமலை மாவட்டத்தின் பொதுச்சபை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியுள்ளார்.

# உலகத் தமிழர் பேரவையின் இமாலய முட்டாள்தனம்



## பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் மறுசீரமைப்புகளில் கால் இழுப்பதற்கு உலகத் தமிழர் பேரவை அரசாங்கத்திற்கு இன்னுமொரு காரணத்தை வழங்கியுள்ளது.

**இந்த அறிவிப்பில் இமாலயம் எதுவும் இல்லை. நல்லாட்சி உடன்படிக்கையைப் போலவே இதுவும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு சவாலாக அமையாத அளவுக்கு சில மேட்டுக்குடித் தமிழர்கள் தமது தடையைக் குறைத்துக் கொண்டதால், பிக்குகளும் சிங்கள அரசியல்வாதிகளும் புன்னகைப்பதும், புகைப்படம் எடுப்பதும் எளிது. ஏனைய தமிழ் நடிகர்களை விடவும், தமக்கு முன்னிருந்த தலைமுறை தமிழ் தலைவர்களை விடவும் தமக்கு நன்றாக தெரியும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவையின் நம்பிக்கையில் இந்த முட்டாள்தனம் அடங்கியுள்ளது.**

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், உலகெங்கிலும் உள்ள ஈழத்தமிழர்கள் தமது அடையாளத்தையும், அதில் பொதிந்துள்ள அரசியலையும் அதிகளவில் தழுவி வருகின்றனர். சமீபத்தில் பிரபலமான தமிழக பாடல் போட்டியில் வெற்றி பெற்ற வடகிழக்கைச் சேர்ந்த கில்மிஷா யாழிசையும், வெற்றிகரமான நெட்பிளிக்ஸ் நிகழ்ச்சியின் மூலம் இப்போது வீட்டுப் பெயராக இருக்கும் கனடாவைச் சேர்ந்த மைத்ரேயி ராமகிருஷ்ணனும் ஈழத்தமிழர்கள் தங்கள் அடையாளத்தை எப்படிப் பிடித்துக் கொண்டு தமிழர்கள் எதிர்கொள்ளும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக் காட்ட தங்கள் தளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள். தமிழ்த் தேசியம் எதிர்ப்பாக செழித்து வளர்ந்து வருவதுடன், எதிர்காலத்திலும் தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும். தமிழ் தேசியவாத அணிதிரட்டல், எல்லைகள் மற்றும் கண்டங்களைக் கடந்து, இலங்கையை சர்வதேச நிகழ்ச்சி நிரலில், குறிப்பாக நீதி மற்றும் கொடூரமான குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பிரச்சினைகளைச் சுற்றி வைத்திருக்கிறது. ஜெனீவா முதல் டி.சி வரை, லண்டன் முதல் டெல்லி வரை தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக இலங்கை விவாதிக்கப்படுகிறது, மேலும் தமிழ் தேசியவாதிகள் இந்த செயல்முறைகளில் பங்கேற்பது சரியானது. தமிழர் அணிதிரட்டல், நல்லெண்ணத்தால் அல்ல, மாறாக, இலங்கை தொடர்ந்து சந்தித்து வரும் நெருக்கடியின் போது, சர்வதேச பின்னடைவுக்கு அஞ்சி, மாநிலத்தை மிக மோசமான நிலைக்கு திரும்ப விடாமல் தடுத்துள்ளது. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிராகரிப்பது போன்ற கோரிக்கைகளில் வேரூன்றியுள்ள ஒரு கொள்கை ரீதியான தமிழ் தேசியவாத அரசியலே இலங்கையின் மோதலை தொடர்ந்தும் தீவிரமாக எடுத்துக் கொள்ள சர்வதேச சமூகத்தைத் தூண்டும் முக்கிய விடயங்களில் ஒன்றாகும்.

இந்த அரசியல் பின்னணியில்தான் உலகத் தமிழர் பேரவை இந்த ஆண்டின் தொடக்கத்தில் நேபாளத்தில் பௌத்த மதகுருமார்களுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்றது, இது இந்த மாதம் இலங்கைக்கு மிகவும் விளம்பரப்படுத்தப்பட்ட சுற்றுப்பயணத்திற்கு வழிவகுத்தது. இந்த பிரகடனம் சிவில் சமூகத்தின் பல்வேறு உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளிடம் கவனமாக திட்டமிடப்பட்ட புகைப்படங்களில் ஒப்படைக்கப்பட்டது. இந்த முயற்சிகள் தேசியவாத கொள்கைகளில் உறுதியாக இருக்கும் மற்றும் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை தொடர்ந்து மீறும் பரந்த தமிழ் அரசியலிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பில் அதிக இமாலயம் இல்லை. இது ஒரு புறம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு சவால் விடாத, மறுபுறம், யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்ததை விட தமிழ் அரசியல் தடையை மேலும் குறைக்கும் மிகவும் வெற்று ஆவணமாகும். பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வுக்கான சர்வதேச உந்துதலைத் தணிக்கும் முயற்சியில், இலங்கை அரசு மீண்டும் சில விளிம்புநிலை நடிகர்களுடன் ஈடுபாட்டை சுட்டிக்காட்ட அனுமதிக்கும். பாரிய அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான உந்துதல் நல்லிணக்க முயற்சிகளுக்கு தீங்கு விளைவிக்கும் என்பது அரசின் வாதம். உலகத் தமிழர் பேரவை பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு ஆகியவற்றில் கால் இழுப்பதற்கு அரசாங்கத்திற்கு மற்றொரு காரணத்தையும் கொடுத்தது.

மோதலுக்கான மூல காரணங்கள் சிக்கலானவை அல்ல, தமிழர்களின் குறைகளின் சட்டபூர்வமான

மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# உலகத் தமிழர் பேரவையின் இமாலய முட்டாள்தனம்

தன்மை பெரும்பாலும் இலங்கைக்கு வெளியே மறுக்கப்படவில்லை. சுருக்கமாகச் சொன்னால், 1948 இல் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், பெரும்பான்மை சிங்கள மக்கள் சிங்கள-பௌத்த மற்றும் சிங்கள பௌத்தர்களுக்கு சிறப்புரிமை வழங்கும் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தைத் தொடர்ந்தனர். ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற ஏனைய குழுக்கள் பாகுபாட்டை எதிர்கொண்டன. ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள், அதன் மக்களின் ஆதரவுடன், சிங்கள பௌத்த இனவாத அரசைக் கட்டியெழுப்புவதற்கு எதிராக பின்வாங்கின. இது ஈழத்தமிழர்கள் என்ற வலுவான தேசிய, அரசியல் அடையாளத்தை வளர்த்தெடுத்தது, அதன் இருப்பு மட்டுமே கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருந்த சிங்கள பௌத்த இனக்குழுவுக்கு மிகப் பெரிய தடையாக அமைந்தது. இது சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பை நசுக்கும் ஒரு இனப்படுகொலை பிரச்சாரத்தைத் தொடங்க இலங்கை தலைமைக்கு போதுமான காரணத்தை வழங்கியது. 1956 ஆம் ஆண்டின் சிங்களம் மட்டுமே கொண்ட சட்டம் முதல், தமிழ் மாவீரர் தின நினைவேந்தலை முறியடிக்குமாறு ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்த மாதம் பொலிசாருக்கு உத்தரவிட்ட வரை, இலங்கை அரசு தமிழர்களை, பெரும்பாலும் ஒரு பரந்த இலங்கை தேசத்திற்குள், சிங்கள-பௌத்தத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள நிர்பந்திக்கப்பட்டு, "தேவையற்ற விஷயங்களைக் கோரக்கூடாது" என்று கட்டாயப்படுத்தப்பட்ட தமிழர்களை அடிபணிய வைக்க முயல்கிறது என்று சரத் பொன்சேகாவை மேற்கோள் காட்டுகிறார். இன்றுவரை இந்த மோதல் மேலாதிக்கமும் அதற்கு எதிரான எதிர்ப்பும் இலங்கையின் பிரதான போட்டியாகவும், தீவில் ஸ்திரத்தன்மையையும் சகவாழ்வையும் தொடர்ந்து தடுக்கும் போட்டியாகவும் உள்ளது.

**இன்றுவரை இந்த மோதல் மேலாதிக்கமும் அதற்கு எதிரான எதிர்ப்பும் இலங்கையின் பிரதான போட்டியாகவும், தீவில் ஸ்திரத்தன்மையையும் சகவாழ்வையும் தொடர்ந்து தடுக்கும் போட்டியாகவும் உள்ளது.**

பரந்த அளவில், இது செல்ல மூன்று வழிகள் உள்ளன. ஒன்று, இலங்கை ஒரு உண்மையான பன்முகத்தன்மை கொண்ட தீவாக மாறுகிறது, மற்றவர்களின் உரிமைகளில் தலையிடாமல் தங்கள் சொந்த கூட்டு அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய பல தேசிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. சுதந்திரம் பெற்றதில் இருந்தே தமிழர்கள் விரும்புவது இதுதான். இரண்டாவதாக, வெகுஜன அட்டூழியங்களுக்கு பொறுப்பேற்காமல், அரசியல் தீர்வு இல்லாமல் தற்போதைய நிலை தொடர்கிறது. சிங்கள பௌத்த மேலாதிக்கமும் அதற்கு எதிரான தமிழர் எதிர்ப்பும் தொடர்ந்து மோதிக்கொண்டே இருக்கும், இதன் விளைவாக எப்போதும் அதிகரித்து வரும் பதட்டங்கள் மற்றும் ஸ்திரமின்மை அதிகரிக்கும். மூன்றாவதாக, ஈழத்தமிழர்கள் இலங்கையில் சிங்கள-பௌத்தத்தின் மேலாதிக்கத்தையும், வெகுஜன அட்டூழியங்களுக்கு அரசு விலக்களிக்கப்படுவதையும் ஏற்றுக் கொள்கின்றனர். அவர்கள் பொறுத்துக் கொள்ளப்படுவார்கள், ஆனால் பெரும்பான்மையினரின் விருப்பப்படியே இருப்பார்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களுக்கு எதிரான தொடர்ச்சியான பாகுபாடு மற்றும் வன்முறைகள் கூட இதற்குச் சான்றாகும். இதுதான் அனைத்து பிரதான சிங்களக் கட்சிகளாலும் இயற்றப்பட்ட இலங்கையின் அரசைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் வெளிப்படையான தலைவிதியாகும்.

பெரும்பாலான நியாயமான மக்கள் தற்போதைய நிலை நிலைக்க முடியாதது மற்றும் விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதை அறிவார்கள், ஆனால் தற்போதைய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு இது தொடர அதிக வாய்ப்புள்ளது. தீவில் உள்ள அனைவருக்கும் சிறந்த தீர்வான தெரிவு ஒன்றை வலியுறுத்துவது பொது அறிவாக இருக்கும் என்று ஒருவர் நினைப்பார். ஆனால் சர்வதேச சமூகத்தின் சில பிரிவினராலும் உலகத் தமிழர் பேரவை போன்ற ஒரு சில தமிழர்களாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாலும் மிகவும் "நடைமுறை" தெரிவு என்று கூறப்படுவது, என்றாவது ஒரு நாள் அது தெரிவு ஒன்றிற்கு இட்டுச் செல்லக்கூடும் என்ற நம்பிக்கையுடன், மூன்றாவது தெரிவாகும். ஆனால், ஈழத்தமிழர்கள் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும், இரண்டாம் தர அந்தஸ்தை மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும், நடந்த கொடூரக் குற்றங்களை மறந்துவிட வேண்டும், 1983 அல்லது 2009-ல் இருந்ததைப் போல இன்றைய தருணத்தில் ஏற்பட்ட தீங்கு மோசமாக இல்லை என்று நன்றியுடன் இருக்க வேண்டும் என்று மூன்றாவது விருப்பம் எதிர்பார்க்கிறது.

தமிழ் மக்களில் பெரும் பகுதியினருக்கு இந்த அடிமை வாழ்க்கை ஏற்கனவே யதார்த்தமாக உள்ளது, குறிப்பாக நாட்டின் தெற்கில் வாழ்பவர்களுக்கு, பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப வாழ்பவர்களுக்கு. வடகிழக்கில் அரசின் அடக்குமுறைகள், நினைவேந்தல்கள், அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் என்பவற்றுக்கு எதிராக ஓரளவு எதிர்ப்புக்கள் காணப்பட்டாலும், தமிழர் தாயகத்திற்கு வெளியில் இருப்பவர்களுக்கு இது ஒரு தெரிவல்ல. தெற்கில் உள்ள ஈழத்தமிழர்கள் அந்த வகையில் தெற்கை உரிமை கோருவதில்லை அவர்கள் அரசை எதிர்க்கும் ஆபத்து அவர்களின் தாயகம் அல்ல. 1983 கறுப்பு ஜூலை படுகொலைகளுக்குப் பின்னர் கொழும்பில் தமிழர்களின் பொருளாதாரம் உயிர்வாழ்வது, தலைநகரில் பெரும்பான்மையான தமிழ் வணிகங்கள் அழிக்கப்பட்டது, இயற்கையாகவே வடகிழக்கை விட ஓரளவு இரண்டாம் தர அந்தஸ்தை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.

ஈழத்தமிழர்கள் இலங்கையுடன் தகாத உறவில் வாழ்கின்றனர், இதிலிருந்து கொடுமைகளுக்கு நீதி கிடைப்பதும், இலங்கை அரசை மறுசீரமைப்பதும் மட்டுமே ஒரே நிவாரணம். தமிழ் தேசியவாதத்தால் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் மோதல்தான், சிங்கள பௌத்தம் மேலாதிக்கத்தை ஆட்சி செய்யும் மற்றும் தமிழர்களின் தேசியத்தை வன்முறையாக தகர்த்தெறிந்த ஒரு நாட்டில் - அதன் வெளிப்படையான விதியை நிறைவேற்றுவதில் இருந்து அரசைத் தடுத்துள்ளது.

தெளிவாகச் சொல்வதானால், ஒரு உரையாடலை நடத்துவது பிரச்சினை அல்ல. அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் அனைத்து மதங்களின் மதகுருமார்களுடன் உரையாடல் இருக்க வேண்டும். ஆனால்

மிகுதி 08 ஆம் பக்கத்தில்...

# உலகத் தமிழர் பேரவையின் இமாலய முட்டாள்தனம்

உரையாடல் என்பது வெறும் கும்பாய பயிற்சியாக இல்லாமல் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். 2000 களின் முற்பகுதியில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் உட்பட அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கான தமது சொந்த அரசியல் உறுதியின்மையை மூடிமறைக்க பௌத்த மதகுருமார்களின் பிடிவாதத்தை அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பயன்படுத்தியுள்ளன. சிங்கள தேசியவாத அரசியல்தான் பௌத்த மதகுருமார்களை உயர்த்தியது. இந்த நிலைக்கு. தமிழ் கோரிக்கைகள் உட்பட சிங்கள-பௌத்த மேலாதிக்கத்திற்கு உணரப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கும், இந்தியா மற்றும் தமிழகத்துடன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இணைப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளுக்கும் தேவைப்படும்போது பயன்படுத்தப்படும் ஒரு வசதியான கருவியாக பிக்குகள் இருந்தனர். மதகுருமார்கள் அடிப்படையில் அரசியல் மயப்படுத்தப்பட்டு சிங்கள அரசியல்வாதிகளால் வசதியாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். எனவே, இலங்கை அரசிற்குள் அரசியல் விருப்பம் இல்லாவிட்டால், இந்த நடவடிக்கைகள் அர்த்தமற்றவை.

அது உலகத் தமிழர் பேரவையின் முயற்சிகளின் மையப் பிரச்சினைக்கு நம்மைக் கொண்டுவருகிறது. வெகுஜன அட்டூழியங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் ஒரு இனவாத அரசுக்கு எதிரான பின்னடைவு ஆகிய குறைந்தபட்ச நிகழ்வுகள் நடப்பதற்கு பாதகமான அளவிற்கு தடையை குறைப்பதன் மூலம் அவை இலங்கையில் மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்ற கொடூரக் குற்றங்களில் தீவிரமாக சம்பந்தப்பட்டவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம், உலகத் தமிழர் பேரவை, யுத்தத்தில் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கோரிக்கைகளை இழிவுபடுத்துகிறது. பௌத்த மதகுருமார்களும் சிங்கள அரசியல்வாதிகளும் உலகத் தமிழர் பேரவையுடன் மகிழ்ச்சியுடன் புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பார்கள், ஏனெனில் தமிழர்கள் சிங்கள மேலாதிக்கத்திற்கு ஒரு சக்திவாய்ந்த அச்சுறுத்தல் என்பதை அவர்கள் அறிவார்கள், மேலும் இது சர்வதேசத்தில் தமிழர் ஆதரவு முயற்சிகளை தணிக்க உதவும் என்று நம்புகிறார்கள்.

2015 இன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவையின் ஈடுபாட்டைப் போலவே, இந்த பிரகடனமும் இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல், நீதி மற்றும் ஒரு நிலையான அரசியல் தீர்வுக்கான சர்வதேசமயமாக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எதிராக, இணையான நல்லிணக்க முயற்சி நடந்து வருவதாக வாதிடுவதன் மூலம் பின்னோக்கிச் செல்வதற்கான ஒரு அத்தி இலையை வழங்குவதாகும். ஆனால் இந்த வாதங்களை எவ்வாறு கையாள்வது என்பதை அறிந்த அனுபவமிக்க மற்றும் வெளிப்படையான செயற்பாட்டாளர்களால் தமிழ் அரசியல் நிறைந்துள்ளது, இந்த முயற்சிகளை நிராகரிப்பதில் வடக்கு கிழக்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள பலதரப்பட்ட தமிழ் நடிகர்கள் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியதன் மூலம் இது எடுத்துக்காட்டப்படுகிறது.

இந்த வகையான ஈடுபாடு புதுமையானது அல்ல. இதில் கலந்து கொள்பவர்களும், பக்கவாட்டில் இருந்து முயற்சிகளை உற்சாகமாக வரவேற்பவர்களும், ரணில் - சிறி நல்லாட்சி தருணத்தை அப்பாவி நம்பிக்கையில் வாங்கிய அதே நடிகர்களும், மாநிலங்களும்தான். இலங்கையின் வரலாறு நெடுகிலும், தமிழ் உயரடுக்கின் சில பிரிவுகள் பிரதான தமிழ் கொள்கைகளை கைவிடுவதற்கு பிரதிபலனாக, பெரும்பான்மை அரசிடமிருந்து சலுகைகளைப் பெற மீண்டும் மீண்டும் முயற்சித்துள்ளன. அவை அனைத்தும் தோல்வியடைந்தன. இந்த வகை மேட்டுக்குடி நடிகர் சட்டப்பூர்வத்தன்மையையும் அந்தஸ்தையும் விரும்புகிறார். அரசியல் தடை எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அமெரிக்க அரசாங்கம் போன்ற சக்திவாய்ந்த சர்வதேச சக்திகளிடமிருந்தும், இலங்கைக்குள்ளும் அவர்களுக்கு அதிக அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கிறது.

மகிந்த ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்கா போன்ற போர்க்குற்றவாளிகளுடன் புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பது அவர்களின் பார்வையில் மரியாதைக்குரிய அடையாளமாகும், அவர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதாகும். ஆனால் பிரச்சினை என்னவென்றால், ஒவ்வொரு முறையும் தமிழர்கள் தங்கள் தடையைக் குறைக்கும்போது, இலங்கை அதை இன்னும் குறைக்கிறது. தமிழர்கள் தனிநாடு கோரியபோது, சமஷ்டி வேண்டும் என்று தமிழக அரசு கூறியது. தமிழர்கள் சமஷ்டியைக் கோரியபோது, 13 ஆவது திருத்தத்தின் வரையறுக்கப்பட்ட மாகாண அதிகாரப் பகிர்வைத் தாண்டிச் செல்லப் போவதில்லை என்று அரசு கூறியது. இப்போது 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஒரு சில தமிழ்க் குழுக்கள் கோருகின்ற நிலையில், அதிகாரப் பகிர்வின் பலவீனமான வடிவமான "13 மைனஸ்" பற்றி அரசு பேசுகிறது.

உலகத் தமிழர் பேரவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் (மற்றும் அனைத்துலக சமூகத்தின் அங்கத்தவர்களும்) குறைந்தபட்ச எதிர்ப்புப் பாதையை விரும்புவதாகத் தோன்றினாலும், ஈழத்தமிழர்கள் விருப்பத்துடன் அடிமைப்படுத்தலைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது நியாயமற்ற எதிர்பார்ப்பாகும். பன்முகத்தன்மை கொண்ட தீவு சாத்தியம்.

**1948 ஆம் ஆண்டிலிருந்து, தமிழர்களுடன் ஒருபுறம் இருக்க, தங்களுக்குள் கூட மோதலுக்கான மூலக் காரணங்கள் குறித்து வெளிப்படையான உரையாடலில் ஈடுபட சிங்களப் பெரும்பான்மையினரின் அரசியல் விருப்பம் இல்லாதது இலங்கையின் அமைதிக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது. இந்த பிரகடனத்தின் வெற்றுத்தன்மையே அதற்குச் சான்று. இந்த மோல் மலையிலிருந்து ஒரு மலைத்தொடரை உருவாக்க வேண்டாம்**

**மிகுதி 09 ஆம் பக்கத்தில்...**

# உலகத் தமிழர் பேரவையின் இமாலய முட்டாள்தனம்

பிரச்சினை என்னவென்றால், உலகத் தமிழர் பேரவைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் தமிழர்களிடம் உள்ள அரசியல் அதிகாரத்தை அரவணைத்துச் செயல்படுத்துவதற்கான விருப்பமும் தொலைநோக்குப் பார்வையும் இல்லை, ஏனென்றால் இது இலங்கை அரசை மட்டுமல்ல, பல ஆண்டுகளாக இலங்கையை ஒரு "நிர்வகிக்கக்கூடிய பிரச்சினையாக" ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ள சர்வதேச சமூகத்தின் பிரிவுகளையும் எதிர்கொள்வதாகும். நல்லாட்சி அரசாங்கத்தின் போது, 2018 ஆம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் போது உட்பட, கூட்டமைப்பு மீண்டும் மீண்டும் கூட்டணிக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்கும் போது இது தெளிவுபடுத்தப்பட்டது. ராஜபக்ஷக்கள் மீண்டும் வருவதைத் தடுக்க விரும்புவதாக அப்போது அவர்கள் கூறிய வாதம். ஆனால், ஐயோ, ஒரு வருடம் கழித்து எப்படியும் ராஜபக்ஷக்கள் திரும்பினர்.

மொத்தத்தில், இந்த பிரகடனத்தில் இமாலயம் எதுவும் இல்லை. நல்லாட்சி உடன்படிக்கையைப் போலவே இதுவும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு சவாலாக அமையாத அளவுக்கு சில மேட்டுக்குடித் தமிழர்கள் தமது தடையைக் குறைத்துக் கொண்டதால், பிக்குகளும் சிங்கள அரசியல்வாதிகளும் புன்னகைப்பதும், புகைப்படம் எடுப்பதும் எளிது. ஏனைய தமிழ் நடிகர்களை விடவும், தமக்கு முன்னிருந்த தலைமுறைத் தமிழ்த் தலைவர்களை விடவும் தமக்கு நன்றாகத் தெரியும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் நம்புவதில்தான் முட்டாள்தனம் அடங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளரும் அத்தகைய முன்னெடுப்பு முன்னெப்போதும் இல்லாதது என்று கூறினர், சம்பந்தன் கூட, "நாங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே இதைச் செய்திருக்க வேண்டும்" என்றும் "நாங்கள் உங்களுக்குப் பின்னால் பல ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறோம்" என்றும் கூறினார். இது முற்றிலும் தவறானது மற்றும் பேச்சுவார்த்தைக்கான பல ஆண்டுகால தமிழர்களின் முயற்சிகளை மிகவும் அவமதிக்கும் செயலாகும். யுத்த நிறுத்தத்தின் போது சம்பந்தன் மதகுருமார்களிடம் தான் கொண்டிருந்த தொடர்புகளை மறந்திருக்கலாம், அது பயனற்றது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், பண்டா - செல்வா உடன்படிக்கை, யுத்த நிறுத்தம், நல்லாட்சி அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவு வரை, தமிழர்களின் எதிர்ப்புப் பாதை அத்தகைய முன்முயற்சிகளின் சடலங்களால் நிரம்பியுள்ளது - இவை அனைத்தும் இதை விட மிக முக்கியமானவை.

பல தசாப்தங்களாக அமைதியான தமிழ் முயற்சிகளை தென்னிலங்கை பிரதிபலித்திருந்தால் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். 1948 ஆம் ஆண்டிலிருந்து, தமிழர்களுடன் ஒருபுறம் இருக்க, தங்களுக்குள் கூட மோதலுக்கான மூலக் காரணங்கள் குறித்து வெளிப்படையான உரையாடலில் ஈடுபட சிங்களப் பெரும்பான்மையினரின் அரசியல் விருப்பம் இல்லாதது இலங்கையின் அமைதிக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது. இந்த பிரகடனத்தின் வெற்றுத்தன்மையே அதற்குச் சான்று. இந்த மோல் மலையை வைத்து ஒரு மலைத்தொடரை உருவாக்க வேண்டாம்.







# வான வேடிக்கைகளோடு புத்தாண்டை வரவேற்ற ஆஸ்திரேலியா, நியூசிலாந்து!




ஐங்கரன் விக்கினேஸ்வரா

2024ஆம் ஆண்டு பிறந்துவிட்டதை உலகின் சில பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் முழு வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. புதிய ஆண்டை முதன்முதலாக வரவேற்றது, பசிபிக் நாடான கிரிபாட்டி. அதைத் தொடர்ந்து ஒரு மணிநேரம் கழித்து நியூசிலாந்து புத்தாண்டைக் கொண்டாடியது. ஆஸ்திரேலிய நகரத்தின் புகழ்பெற்ற வானவேடிக்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சிட்னியில் கூடினர். ஆஸ்திரேலியாவில் 2024புத்தாண்டு கொண்டாட்டம், இரவை பகலாக்கிய வான வேடிக்கை நிகழ்ச்சிகள் சிட்னி நகரில் காண்போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப்பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங்கேறின. சிட்னியின் வானவேடிக்கை அதன் துறைமுகப் பாலம், ஓபரா ஹவுஸ் மற்றும் அதன் புகழ்பெற்ற துறைமுகத்தில் நடைபெற்றது. ஆஸ்திரேலியாவில் 2024 புத்தாண்டு கொண்டாட்டமானது இரவை பகலாக்கிய வான வேடிக்கை நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன.

உலகம் முழுவதும் 2024 புத்தாண்டை வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர். அந்த வகையில் ஆஸ்திரேலியாவில் தற்போது புத்தாண்டு பிறந்துள்ளது. இங்குள்ள சிட்னி நகரில் ஒவ்வொரு ஆண்டும் வெகு விமரிசையாக புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறும். இதைக் கண்டு ரசிப்பதற்காகவே உலகம் முழுவதும் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் ஆஸ்திரேலியாவிற்கு செல்கின்றனர். அந்த வகையில் இன்று சிட்னி நகரில் புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்டியது.

அங்கு 2024 ம் ஆண்டை வரவேற்கும் விதமாக வண்ண, வண்ண வான வேடிக்கைகளுடன் இரவை பகலாக்கும் வகையில் வானத்தில் ஒளி வெள்ளம் பரவியது. இதில் காண்போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப்பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங்கேறின. இதனைக் கண்டு ரசித்த மக்கள், தங்களுக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு 2024 ம் ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.









# யாழ்/குப்பிளானில் உள்ள களஞ்சியசாலையில்

## பழுதடைந்த விதை உருளைக்கிழங்குகளை புதைக்க முடிவு!

யாழ்ப்பாணம் - குப்பிளானில் உள்ள களஞ்சிய சாலையில் பழுதடைந்த உருளைகிழங்கு விதைகளை பாதுகாப்பாக அகற்றி விவசாய நிலங்கள் மற்றும் குடிநீரை பாதிக்காத வகையில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தின் கண்காணிப்பில் மூன்று அடி ஆழத்திற்கு கீழே பாதுகாப்பு முறைமைகளை கையாண்டு சில தினங்களுக்குள் பழுதான உருளைக்கிழங்கு விதைகள் புதைக்கப்பட வுள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை (31)இடம் பெற்றது. குறித்த கலந்துரையாடலில் உருளைக்கிழங்கு விதைகளை விவசாய நிலங்களில் புதைத்து மண்ணையும் நிலத்தடி நீரையும் மாசுபடுத்த வேண்டாம் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனபோதும் உருளைக்கிழங்கு விதைகளை பொலீத்தினில் பொதி செய்து பாதுகாப்பாக களஞ்சியசாலையில் இருந்து அகற்றி பாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பழுதான உருளைக்கிழங்கு விதைகளை பாதிப்பில்லாத வகையில் புதைப்பதற்கு ஏற்ற இடத்தை இனங்காண
தீர்மானிக்கப்பட்டபோதும் எங்கே புதைப்பது என்பது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.











# புதிய ஆண்டு புதிய தேர்தலுக்கு வழிவகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும்.

# மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர் நாட்டுக்குத் தேவை!

## புத்தாண்டுச் செய்தியில் சஜித் பிரேமதாச தெரிவிப்பு!!

வெற்றிகளை விட எண்ணற்ற தோல்விகளை உள்ளடக்கிய ஒரு வருடம் முடிந்து புதிய வருடம் உதயமாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டு நம் மனதில் மகிழ்ச்சியைக் கொண்டுவரக் கூடியவாறு எதுவும் கிடைக்காத ஆண்டு. இந்த ஆண்டில் மக்கள் வெற்றியின் சாயல் கூட காணவில்லை.முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற அரசை உருவாக்கினால் அன்றி தற்போதைய குழப்பமான மற்றும் ந பிக்கையற்ற இருள் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.எனவே, புதிய ஆண்டு புதிய தேர் தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், 2024 ஆம் ஆண்டும் ராஜபக்ஷர்களை முன்னரையும் விடப் பாதுகாப்பாக ஆட்சியாளர் தொங்கு பாலத்தின் ஊடாகக் கரை சேர்க்கும் ஆண்டாக அமையலாம்.நாடு பல பாரிய பொருளாதார மற்றும் அரசியல் இடர்களை எதிர்நோக்கி வரும் இந்தத் தருணத்தில், நாட்டு மக்கள் சாதாரண வாழ்க்கை நிலைமைகளில் கூட பல அசாதாரண சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர்.விவசாயம் மற்றும் தொழில் முயற்சி யாளர் சார்ந்த தன்னிறைவுப் பொருளா தார முறை தற்போதைய அரசின் தொலைநோக்கு அற்ற நடவடிக்கை களால் முற்றிலும் தலைகீழாக மாறி யுள்ளது. இந்த நிலை மாற வேண்டுமானால், ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றிச் சிந்திக்காமல் மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர்களே - ஆட்சி முறையே நாட்டுக்குத் தேவை. 75 ஆண்டுகால ஜனநாயக வர லாற்றில் அதிகாரம் இல்லாமல் எந்த எதிர்க் கட்சியும் செய்யாத பொதுச் சேவையை நாட்டின் ஜனரஞ்சக எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 3 ஆண்டுகளில் செய்துள்ளது. இந்தச் சேவையை 2024 ஆம் ஆண்டிலும் தொடர்வதே எங்கள் நோக்கம். மேலும், மக்களை ஒடுக்கி, வரிக்கு வரி விதித்து, மக்களின் வாழ்வை அழிக்கும் வகையில் அரசு செயல்பட்டுள்ள இந்தத் தருணத்தில், நாம் மீண்டும் ஒரு நாடாக ஒன்றிணைய வேண்டும். இந்தப் புத்தாண்டு இலங்கையர் களான எமக்கு முக்கியமான ஆண் டாகும். நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பல தேர்தல்கள் நடை பெறவுள்ள ஆண்டாகும்.எனவே, இதுவரையில் நாம் பெற்ற வெற்றிகளின் பலனை அமைதியான முறையில் அனுபவித்து, ஜனநாயகத் தைப் பாதுகாத்துக் கொண்டு எமது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.இந்தப் புத்தாண்டிலாவது மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும் என்று தெரிவித்துள்ளார்.

# தாய்நாட்டை பலப்படுத்த அனைவரினதும் பொறுப்புணர்வும், அர்ப்பணிப்பும் தேவை!

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு!!

பல சவால்களுக்கும் எதிர்பார்ப் புக்களுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ள,நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி களில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத் தாங்கிக் கொண்டதன்பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட் பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க எம்மால் முடிந்துள்ளது. இருப்பினும் பொருளாதார ஸ்திரத் தன்மைக்காக, அதேபாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். அது மலர் பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்தி ருக்கும். இதனால், இலங்கை மீளக் கட்டி யெழுப்பும் போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டி யது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்திற்கு ஜேனஸ் எனும் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது. அக்கடவுளினால் முன்னோக்கி மாத் திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம்.! அதனால் எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பி லும் அறிந்து, ஒவ்வொருவரினதும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண் டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புக்களை அறிந்து கொள்வோம். அவற்றை செயற்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம். அதற்காக பொறுப்புடனும், அர்பணிப்புடனும் செயற்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக் கொள்வோம். பிறந்திருக்கும் இந்த ஆண்டு, அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள் என தெரிவித்துள்ளார்.

# கராத்தே மற்றும் தாய்வுண்டோ போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு மட்டக்களப்பில் கௌரவம்!!







2023 ஆம் ஆண்டு மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் கராத்தே மற்றும் தாய்வுண்டோ போட்டிகளில் வெற்றியீட்டிய மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (31) திகதி மட்டக்களப்பில் இடம்பெற்றது. மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர மகளீர் தேசிய பாடசாலையில் SKO கழக தலைவரும் பிரதான போதனாசிரியர் எம்.ரீ.பிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் அவர்களும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் அவர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

அதிதிகளை மலர் மாலை அணிவித்து வரவேற்றதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் மாணவர்களது கண்கவர் வரவேற்பு நடனம் அரங்கை அலங்கரித்தது.

மாவட்டத்தில் உள்ள 17 பாடசாலைகளைச் சேர்ந்த தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் சாதனை புரிந்த 150 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகளும், 22 வது மூத்தோருக்கான கோலூன்றி பாய்தல் நிகழ்வில் கிழக்கு மாகாணத்தில் இருந்து இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தி வெண்கலம் பதக்கம் வென்ற பீ.ஜெயகுமார் உள்ளிட்ட 2023 ஆம் ஆண்டில் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் சிறந்த பெறு பேறுகளை கராத்தே மற்றும் தாய்வுண்டோ போட்டிகளில் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த சிறந்த பயிற்றுவிப்பாளர்களும் இதன்போது சான்றிதழ், கேடயம் மற்றும் நினைவுச்சின்னங்கள் என்பன வழங்கி அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு தேசிய மற்றும் மாகாண ரீதியில் பதக்கங்களை வென்ற வீரர்களுக்கு இதன்போது இராஜாங்க அமைச்சரினால் கராத்தே உபகரண தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய கல்வி பணிமனையில் உடற்கல்வி பணிப்பாளர், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் உள்ளிட்ட பயிற்றுவிப்பாளர்கள் பலரும் இதன்போது கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.













# பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தி! கிளிநொச்சியில் நிகழ்வு!









"மாற்றத்தை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைந்த நாம்" எனும் தொனிப்பொருளில் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு கிளிநொச்சியில் மலையகம் 200 நிகழ்வு கடந்த ஆண்டு இறுதி நாளில்(30) நடைபெற்றது.

நிகழ்வில் ஞாங தமிழ் தொலைக்காட்சியில் ச ரி க ம ப நிகழ்ச்சியில் திறமையை வெளிப்படுத்திய மலையக குயில் அசானி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.


அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




## கிருபா லேணர்ஸ்

කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |